# செய்தி வெளியீடு

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் படைவீரர் / விதவையர்கள் கவனத்திற்கு.

சேலம் மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகம் மூலம் கீழ்க்காணும் நிதியுதவிகள் பெற்று வரும் முன்னாள் படைவீரர்கள்/ விதவையர்கள் 30/04/2017ம் தேதிக்குள் சேலம் மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தில் தங்களது அசல் படை விலகல் சான்று, அடையாள அட்டை மற்றும் மணியார்டர் ரசீது ஆகியவற்றுடன் நேரில் ஆஜராகி தாங்கள் உயிருடன் இருக்கும் விபரத்தை உறுதி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. மாதாந்திர நிதியுதவி
2. கண்பார்வையற்றோர் நிதியுதவி
3. பக்கவாத நிவாரண நிதியுதவி
4. புற்றுநோய் நிவாரண நிதியுதவி
5. மனவளர்ச்சி குன்றியோர் நிவாரண நிதியுதவி
6. 2–ம் உலகப்போர் முன்னாள் படைவீரர் நிதியுதவி
7. 2ம் உலகப்போர் விதவையர் நிதியுதவி

குறிப்பு – மிகவும் வயதான காரணத்தாலும், நோய்வாய்பட்டுள்ள காரணத்தாலும் அலுவலகம் வர இயலாத நிலையில் உள்ளோர் மட்டும் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து உயிர்ச்சான்று பெற்று சமர்ப்பிக்குமாறும், மருத்துவ நிதியுதவி பெறும் பயனாளிகள் உரிய படிவத்தில் பதிவு பெற்ற மருத்துவரிடமிருந்தோ அல்லது ECHS மருத்துவரிடமிருந்தோ மருத்துவச் சான்று பெற்று சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட ஆட்சித்தலைவர்.